1997 மார்ச் 25]

Thiru S. Raja Reddy: Hon'ble Speaker Sir, the report given to the Hon'ble Chief Minister is far from truth. All the lands are not surrounded by hills. There are plain areas also and the report of the revenue officials is far from truth. As thousands of families are dependent on these lands for their livelihood, may I know from the Hon. Minister whether the Government would reconsider its stand?

Hon'ble Thiru Nanjil K. Manoharan: Hon'ble Speaker Sir, if it is a plain area, we will consider it.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 324, திரு. கே.ஆர். இராமசாமி, மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.

324—

கூட்டுக் குடிநீர்த் திட்டத்தில் சேர்த்தல்

***1325அ—திரு. கே. ஆர். இராமசாமி:**

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இராமநாதபுரம் மாவட்டம், திருவாடனை, ஆர்.எஸ். மங்கலம் ஊராட்சி ஒன்றியங்களில் உள்ள கூட்டுக் குடிநீர்த் திட்டங்கள் செயல்படாதது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அரசு எடுத்த நடவடிக்கை யாது?

மாண்புமிகு திரு. கோ. சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ): இராமநாதபுரம் மாவட்டம், திருவாடனை மற்றும் ஆர்.எஸ். மங்கலம் ஊராட்சி ஒன்றியங்களிலுள்ள சில கூட்டுக் குடிநீர்த் திட்டங்கள் முழுமையாக செயல்படாமல் உள்ளதை சீர் செய்ய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. முதல் கட்டமாக, திருவாடனை மற்றும் ஆர்.எஸ். மங்கலம் ஆகிய ஊராட்சி ஒன்றியங்களைச் சேர்ந்த 21 கூட்டுக் குடிநீர்த் திட்டங்களில் 9 கூட்டுக் குடிநீர்த் திட்டங்கள் தேர்வு செய்யப்பட்டு புனரமைப்புத் திட்டத்தின்கீழ் புனரமைப்புப் பணிகள் போர்க்கால அடிப்படையில் மேற்கொள்ளப்

பட்டன. புனரமைப்புத் திட்டத்தில் மேற்கொண்டு இருந்தாலும், இத்திட்டம் விரிவான குடிநீர் அபிவிருத்தித் திட்டமாகக் கருதப்பட்டது. இத்திட்டத்திலுள்ள ஆழ்துளைக் கிணறுகள் 15 ஆண்டுகளுக்கு மேற்பட்டவை. எனவே புதிதாக 1500 அடிக்கு மேற்பட்ட ஆழமுள்ள ஆழ்துளைக் கிணறுகள் 10 புதிதாக அமைக்கப்பட வேண்டியிருந்தது. ஒவ்வொரு கிணறும் அமைப்பதற்குக் குறைந்தது இரண்டு மாதங்களாகும். இதுவரை ஆழ்துளைக் கிணறுகள் அமைத்து முடிக்கப்பட்டுள்ளன. இதர பணிகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன. 1997-98ஆம் ஆண்டில் இப்பணிகள் அனைத்தும் முடிக்கப்பட்டு, திட்டங்கள் முழுமையாக பயனுக்குக் கொண்டு வரப்படும்.

திரு. கே. ஆர். இராமசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சரவர்கள் எங்கள் மாவட்டத்திற்கு வருகை தந்து நல்ல உள்ளத்துடன், அவர்கள் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு உத்தரவுகள் இட்டார்கள். உத்தரவுகளையிட்டு பல மாதங்கள் ஆகிவிட்டன. ஆனால் அந்தப் பகுதி கடற்கரையைச் சார்ந்த பகுதி. குடிதண்ணீருக்கு அந்தப் பகுதி மக்கள் மிக மிகச் சிரமப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். இன்னும் நாட்கள் கடந்தால் அந்தப் பகுதியிலே கடுமையான குடிதண்ணீர்ப் பிரச்சினை ஏற்பட வாய்ப்பு இருக்கிறது. குறிப்பாக அங்கே ஓரகூர் என்ற ஒரு ஸ்கீம் இருக்கிறது. விலாங்காட்டூர் திருவாடானை, தொண்டி ஸ்கீம், எண்மனக்குடி ஆகிய கூட்டுக் குடிநீர்த் திட்டங்களை உடனடியாக செயல்படுத்த ஆவன செய்வார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கோ. சி. மணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்ற 24-6-1996 அன்று நான் அவர் பகுதிக்கு வந்ததாக ஞாபகம். இதெல்லாம் அவர்கள் எடுத்துச் சொன்னதன் அடிப்படையில் அதற்காக மாவட்டத்திலே கூட்டுக் குடிநீர் திட்டங்களை முறையாகப் பராமரிப்பதற்காகவே 1-7-1996 அன்று இராமநாதபுரத்தை தலைமையிடமாகக் கொண்டு ஒரு பராமரிப்புக் கோட்டம் செயல்படத் துவங்கியிருக்கிறோம். ஆகவே இந்தப் பணிகளை விரைவாகத் தொடங்கி அதையும் சேர்த்து நடத்தும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அமைச்சருடைய மானியக் கோரிக்கை நாளை மறுநாள். ஆகையால் அதில் கேட்டுக் கொள்ளலாம்.

வினா எண் 325, திருமதி ஆர். சரஸ்வதி, மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.